
சிவமயம்



யாழ். மாதகலைப் பிறப்பிடமாகவும்,
ஆபிரிக்கா Mozambique, லண்டன்
ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர் திரு இராமலிங்கம் வேலுப்பிள்ளை

# நினைவு மலர்

In loving memory of Late Mr. Ramalingam Velupillai

21.05.2015

உ
சிவமயம்

# அமரர் திரு இராமலிங்கம் வேலுப்பிள்ளை அவர்கள்



பிறப்பு:
10.
09.
1927

இறப்பு
21.
04.
2015.

## திதிவெண்பா

ஆண்டு மன்மத அமைந்த சித்திரையில்
பூண்ட பூர்வபக்க சதுர்த்திதனில் - மாண்பு
இராமலிங்கம் மைந்தன் வேலுப்பிள்ளை ஐயன்
பரமனடி சேர்ந்தார் காண்

உ

சிவமயம்



திருச்சிற்றம்பலம்

**விநாயகர் துதி**

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

**திருவாசகம்**

அப்பனீ யம்மைநீ ஐயனும் நீ
யன்புடைய மாமனுமாமியும் நீ
ஒப்புடைய மாதருமொண் பொருளும் நீ
யொருகுலமுஞ் சுற்றமு மோருயிரும் நீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய் நீ
துணையா யென்னெஞ் சந்துறப்பிப்பாய் நீ
இப்பொன்னீ யிம்மணிநீ யிம்முத்தும் நீ
யிறைவனீ யேறூர்ந்த செல்வனீயே

**திருவாசகம்**

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச்சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

**திருவிசைப்பா**

ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரள் மணிக்குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!

அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே!

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப்
பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

கற்பனை கடந்த சோதி கருணையே உருவமாகி
அற்புதக் கோலம்நீடி அருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோமமாகுந் திருச்சிற்றம்பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ் செய்கின்ற பூங்கழல் போற்றி போற்றி

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப்புகழ் பாடி
முக்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசத் தினிபாதா
வெற்றிவேலாயுதப் பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

## ஸ்ரீ சாயி பாத அஷ்டோத்திர சதநாமாவளி

1. ஓம் ஸ்ரீ சாயி பாதம் சாயிபாதம்
2. ஓம் ஸ்ரீ சாயி புண்ய பாதம் சாயிபாதம்
3. ஓம் ஸ்ரீ சாயி பாவன பாதம் சாயிபாதம்
4. ஓம் ஸ்ரீ சாயி சரணம் சரணம் சாயிபாதம்
5. ஓம் ஸ்ரீ சாயி பாபா நாசனம் சாயிபாதம்
6. ஓம் ஸ்ரீ சாயி மங்களகரணம் சாயிபாதம்
7. ஓம் ஸ்ரீ சாயி துக்க ஹரணம் சாயிபாதம்
8. ஓம் ஸ்ரீ சாயி துக்க சமனம் சாயிபாதம்
9. ஓம் ஸ்ரீ சாயி பவபய ஹரணம் சாயிபாதம்
10. ஓம் ஸ்ரீ சாயி மோசக்ஷப்ரதானம் சாயிபாதம்
11. ஓம் ஸ்ரீ சாயி ரக்ஷ கரணம் சாயிபாதம்
12. ஓம் ஸ்ரீ சாயி சாக்ஷாதகாரம் சாயிபாதம்
13. ஓம் ஸ்ரீ சாயி சங்கட ஹரணம் சாயிபாதம்
14. ஓம் ஸ்ரீ சாயி சம்சய ஹரணம் சாயிபாதம்
15. ஓம் ஸ்ரீ சாயி ஸர்வவேததாஸரூபம் சாயிபாதம்
16. ஓம் ஸ்ரீ சாயி பாபா பாதம் சாயிபாதம்
17. ஓம் ஸ்ரீ சாயி சத்ய ஸ்வரூபம் சாயிபாதம்
18. ஓம் ஸ்ரீ சாயி தர்மவர்த்தனம் சாயிபாதம்
19. ஓம் ஸ்ரீ சாயி பிரேமஸ்வரூபம் சாயிபாதம்
20. ஓம் ஸ்ரீ சாயி ப்ரேமாகாரம் சாயிபாதம்
21. ஓம் ஸ்ரீ சாயி சாந்தி தாயகம் சாயிபாதம்
22. ஓம் ஸ்ரீ சாயி அபயப்ரதானம் சாயிபாதம்
23. ஓம் ஸ்ரீ சாயி சர்வ லோகநாயகம் சாயிபாதம்
24. ஓம் ஸ்ரீ சாயி சர்வசக்தம் சாயிபாதம்
25. ஓம் ஸ்ரீ சாயி மஹேஸ்வரரூபம் சாயிபாதம்
26. ஓம் ஸ்ரீ சாயி பாவன ரூபம் சாயிபாதம்
27. ஓம் ஸ்ரீ சாயி அபயப்ரதாயகம் சாயிபாதம்
28. ஓம் ஸ்ரீ சாயி சக்திப்ரதாயகம் சாயிபாதம்
29. ஓம் ஸ்ரீ சாயி சக்திப்ரதானம் சாயிபாரம்
30. ஓம் ஸ்ரீ சாயி ஆனந்த தாயகம் சாயிபாதம்

31. ஓம் ஸ்ரீ சாயி ஆஸ்ரிதவத்ஸலம் சாயிபாதம்
32. ஓம் ஸ்ரீ சாயி லோகபரிதம் சாயிபாதம்
33. ஓம் ஸ்ரீ சாயி லோகநாதம் சாயிபாதம்
34. ஓம் ஸ்ரீ சாயி தீனபோஸணம் சாயிபாதம்
35. ஓம் ஸ்ரீ சாயி பக்திப்ரதானம் சாயிபாதம்
36. ஓம் ஸ்ரீ சாயி முக்திப்ரதாயகம் சாயிபாதம்
37. ஓம் ஸ்ரீ சாயி பக்தப்ரியாகரம் சாயிபாதம்
38. ஓம் ஸ்ரீ சாயி ஞானஸ்வரூபம் சாயிபாதம்
39. ஓம் ஸ்ரீ சாயி சுந்தரரூபம் சாயிபாதம்
40. ஓம் ஸ்ரீ சாயி பலப்ரதானம் சாயிபாதம்
41. ஓம் ஸ்ரீ சாயி காலா தீதம் சாயிபாதம்
42. ஓம் ஸ்ரீ சாயி சித்தரூபம் சாயிபாதம்
43. ஓம் ஸ்ரீ சாயி சர்வகுணாத்மகம் சாயிபாதம்
44. ஓம் ஸ்ரீ சாயி ஆபந் நிவாரக சாயிபாதம்
45. ஓம் ஸ்ரீ சாயி ஆர்த்திஹரணம் சாயிபாதம்
46. ஓம் ஸ்ரீ சாயி சாந்தமூர்த்திம் சாயிபாதம்
47. ஓம் ஸ்ரீ சாயி சுலபப்ரசன்னம் சாயிபாதம்
48. ஓம் ஸ்ரீ சாயி சரோஜரம்யம் சாயிபாதம்
49. ஓம் ஸ்ரீ சாயி ஸஜ்ஜன ப்ரியம் சாயிபாதம்
50. ஓம் ஸ்ரீ சாயி துரித நிவாரக சாயிபாதம்
51. ஓம் ஸ்ரீ சாயி மோஹ க்ஷயகரம் சாயிபாதம்
52. ஓம் ஸ்ரீ சாயி புண்யதரிசனம் சாயிபாதம்
53. ஓம் ஸ்ரீ சாயி மோகஹன த்ருஷ்யம் சாயிபாதம்
54. ஓம் ஸ்ரீ சாயி க்ரோத சமனம் சாயிபாதம்
55. ஓம் ஸ்ரீ சாயி ஆனந்தரூபம் சாயிபாதம்
56. ஓம் ஸ்ரீ சாயி பரமானந்த ரூபம் சாயிபாதம்
57. ஓம் ஸ்ரீ சாயி ப்ரம்மானந்தரூபம் சாயிபாதம்
58. ஓம் ஸ்ரீ சாயி சோகவிநாசகம் சாயிபாதம்
59. ஓம் ஸ்ரீ சாயி கோப விநாசகம் சாயிபாதம்
60. ஓம் ஸ்ரீ சாயி ப்ரேம பாரிதம் சாயிபாதம்
61. ஓம் ஸ்ரீ சாயி தேவரூபம் சாயிபாதம்

62. ஓம் ஸ்ரீ சாயி தேவிரூபம் சாயிபாதம்
63. ஓம் ஸ்ரீ சாயி சாந்தஸ்வரூபம் சாயிபாதம்
64. ஓம் ஸ்ரீ சாயி நயன மனோஹரம் சாயிபாதம்
65. ஓம் ஸ்ரீ சாயி கீர்த்திப்ரதானம் சாயிபாதம்
66. ஓம் ஸ்ரீ சாயி ப்ராதஸ்மரணம் சாயிபாதம்
67. ஓம் ஸ்ரீ சாயி ப்ராதர்தருஸயம் சாயிபாதம்
68. ஓம் ஸ்ரீ சாயி கர்ம நிவாரக சாயிபாதம்
69. ஓம் ஸ்ரீ சாயி தர்ம சம்ரக்ஷிதம் சாயிபாதம்
70. ஓம் ஸ்ரீ சாயி தாரித்ரிய சமனம் சாயிபாதம்
71. ஓம் ஸ்ரீ சாயி நயன பீயூஷம் சாயிபாதம்
72. ஓம் ஸ்ரீ சாயி ஆர்த்தி தாயகம் சாயிபாதம்
73. ஓம் ஸ்ரீ சாயி ஆர்த்தி நிவாரகம் சாயிபாதம்
74. ஓம் ஸ்ரீ சாயி ஆனந்த நாதம் சாயிபாதம்
75. ஓம் ஸ்ரீ சாயி கலுஷ விதூரம் சாயிபாதம்
76. ஓம் ஸ்ரீ சாயி காருண்ய கரணம் சாயிபாதம்
77. ஓம் ஸ்ரீ சாயி கோமள த்ருஷ்யம் சாயிபாதம்
78. ஓம் ஸ்ரீ சாயி கமனிய த்ருஷ்யம் சாயிபாதம்
79. ஓம் ஸ்ரீ சாயி ஸ்வாமி பாதம் சாயிபாதம்
80. ஓம் ஸ்ரீ சாயி ஸர்வ பாதம் சாயிபாதம்
81. ஓம் ஸ்ரீ சாயி சுக்கர த்ருஷ்யம் சாயிபாதம்
82. ஓம் ஸ்ரீ சாயி புண்ய பலிதம் சாயிபாதம்
83. ஓம் ஸ்ரீ சாயி பலப்ரதானம் சாயிபாதம்
84. ஓம் ஸ்ரீ சாயி சகடாசுரமர்த்தனம் சாயிபாதம்
85. ஓம் ஸ்ரீ சாயி ஸ்யாம்ள கோமள சாயிபாதம்
86. ஓம் ஸ்ரீ சாயி காமிதபலிதம் சாயிபாதம்
87. ஓம் ஸ்ரீ சாயி அகணித குணகரம் சாயிபாதம்
88. ஓம் ஸ்ரீ சாயி அனுபம ரஸணர் சாயிபாதம்
89. ஓம் ஸ்ரீ சாயி குங்கும சோபிதம் சாயிபாதம்
90. ஓம் ஸ்ரீ சாயி சங்கட மர்த்தனம் சாயிபாதம்
91. ஓம் ஸ்ரீ சாயி மங்கள ரூபம் சாயிபாதம்
92. ஓம் ஸ்ரீ சாயி மங்கள கரணம் சாயிபாதம்

93. ஓம் ஸ்ரீ சாயி சரோஜ வர்ணம் சாயிபாதம்
94. ஓம் ஸ்ரீ சாயி வாரிஜ சோபிதம் சாயிபாதம்
95. ஓம் ஸ்ரீ சாயி அல்லா பாதம் சாயிபாதம்
96. ஓம் ஸ்ரீ சாயி ஈஸ்வர பாதம் சாயிபாதம்
97. ஓம் ஸ்ரீ சாயி ஏசுபாதம் சாயிபாதம்
98. ஓம் ஸ்ரீ சாயி ஜோராஷ்ட்ரபாதம் சாயிபாதம்
99. ஓம் ஸ்ரீ சாயி புத்தபாதம் சாயிபாதம்
100. ஓம் ஸ்ரீ சாயி நானக்பாதம் சாயிபதாம்
101. ஓம் ஸ்ரீ சாயி அபீஷ்டப்ரதாயகம் சாயிபாதம்
102. ஓம் ஸ்ரீ சாயி சாஸ்வத சௌக்யம் சாயிபாதம்
103. ஓம் ஸ்ரீ சாயி புஷ்ப பாதம் சாயிபாதம்
104. ஓம் ஸ்ரீ சாயி கமனீய சுகமம் சாயிபாதம்
105. ஓம் ஸ்ரீ சாயி கலிமல பஞ்ஜனம் சாயிபாதம்
106. ஓம் ஸ்ரீ சாயி கலியுகவரதம் சாயிபாதம்
107. ஓம் ஸ்ரீ சாயி பர்த்தி புரீஸம் சாயிபாதம்
108. ஓம் ஸ்ரீ சாயி பாதம் சாயிபாதம் சாஸ்வத ஆனந்த தாயக பாதம்

ஓம் சாந்தி சாந்தி சாந்தி
லோகா ஸமஸ்தா ஸீகினோ பவந்து (3)
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

## My Dearest Papa



It's finally time for us to part and as sad as it will be, I am just glad to have known you.
I'm going to miss calling you every night to find out what you are having for dinner.
I'm going to miss calling you every Fridays to get your shopping list.
I'm going to miss rearranging your storage room and sorting out your containers and fridge when we visit on Sundays.
I'm going to miss our Sunday visits, 11.00AM sharp bringing you McDonald's and cheekily letting you finish my strawberry milkshake.
I'm going to miss how you insist on putting chilli oil on practically everything you eat and
I'm going to miss choosing your outfits after your showers.
I'm going to miss your highly inspirational phrases and infamous pep talks, and turning your house upside down trying to find batteries for your clock.
I'm going to miss having to explain how to use your mobile phone and
I'm going to miss combing your tufty white hair.
I'm going to miss your uncanny ability to remember practically every event that's occurred in your life (dates and times included).
I'm going to miss making you tea that's either a) too strong or b) too milky and making you cringe that I'm the granddaughter of a professional tea factory superintendent.
I'm going to miss everything about you, from the shimmery, glint in your eye to your enigmatic warm smile.
Look after Mama for me and don't forget you'll always live on in our hearts.

Love you always,
***-Anita***
***(Grand Daughter)***

# Loving Papa

I wanted to start off proceedings with a short history of Papa's life before coming to the UK. I apologize in advance for any factual errors in the dates – something Papa was very good with. He had a enormous memory power especially with dates, times and events.

He was born in Mathagal, Jaffna on the 9th October 1927 but his date of birth was registered as 10th September 1927. Papa was the middle child of 7. The family was humble coming from a Farming background as per his Father. He studied at Mathagal Vignesvara Primary School , St Joseph's school and then St Hendry's at Illawalai.

Whilst growing up, he assisted the British Army at the tender age of 15 during World War 2 and also worked in Trincomalee before moving in with his older brother Mr. Thilayampalam who was a School Principal in a tea plantation estate where he developed his passion for tea and learned the trade from the ground up.

After qualifying, he worked in Ratnapura as a tea maker. During this time, he married to Mama on the 21st July 1954 and after, only child Vimalanathan was born on the 28th November 1956.

In 1958 he moved to Mozambique – a time where air travel wasn't widely available and he spent over a month on a ship to get there. He was recruited there as a specialist tea factory superintendent for Liazi Agricola Limited – a Portuguese plantation company in Milange, Mozambique.

He left everyone behind to take on this huge challenge despite pleas from friends and family, but he established himself, learned to speak Portuguese and had to settle for seeing his family back at home only


once a year. He took on this challenge to help his family and friends, whom he fulfilled and he was there to give helping hand to those in need.

After some time, Mama moved to Mozambique to be with him. He later retired from the position and on the12th June 1983 and went back to Sri Lanka.

In 17th August 1988 he came with Mama to the UK to be with his son and his family.

***- By Murali Daran***
***(Grandson)***

# FAMILY TREE
# வம்சாவழி



# AMILY TREE
# வம்சாவழி

Ramalingam + Nagamuthu
இராமலிங்கம் + நாகமுத்து

Sellathurai
செல்லத்துரை

Thangamma
தங்கம்மா

Velupillai
வேலுப்பிள்ளை

Ponnamma
பொன்னம்மா

Nadarajah
நடராசா

Thambipillai
தம்பிப்பிள்ளை

nathan + Shindi (Balbir)
விமலநாதன் + சிந்தி

Deva Myuren
தேவமயூரன்

Anita Kiran
அனிதாகிரன்



## My Dearest Papa

We have always been very close and fond of papa. While growing up when he used to live with us, he used to pick Daran, Neal and me up from school and every day he would have some opal fruits ready to greet us with during the short walk home. On weekends he would take us to the park and if we ever got ourselves muddy, he always had some tricks with leaves to clean us up with. The other day while we were looking back at old photos and videos of our birthdays, papa and mama were always there at the back of the room full of joy and getting involved. As we are a small family, we were really privileged to have both of our grandparents close to us for most of our lives.

Since those days the tables turned somewhat. Where Papa would look after us as children, we found ourselves repaying the sentiment in his latter days.

We always made sure we visited papa and mama at least once a week, usually on a Sunday, for as long as I can remember. The visits to their place used to consist of having lunch, hearing his old stories about the good old days and doing the little chores around their flat, which he couldn't do himself, and papa telling us that we have not done it properly.

Papa was a very particular man, he liked things done to a high standard and he wouldn't be shy to tell you if you've done a bad or mediocre job right to your face.

Some of his favourite things are his food, he loved his spicy food and nothing was ever chilli enough, his tea -which usually took him half a day to make just the way he liked it, his calendars and time - he never missed an important date for anyone and would always make sure, even in his latter days, that a card should make its way to that person by any means necessary.

Those of you who know him well will know about his incredible memory. He would amaze us with his minute-precise times and

dates of important events in his life. One date he would recite the most was the day he came to the UK to be with his family. A 2-week trip to visit me as a newborn turned into a 28-year stint, but he always had the idea that he would return one day. He had a pre-packed suitcase with toys and gifts for the village he came from if he were ever to return home.

Papa wore his heart on his sleeve and had had a lot of love to give. He always had a saying that he would constantly remind me of, "help the needy, not the greedy". This was a saying, which stuck with me and sums him up perfectly. Papa was an excellent judge of character, and would be there & help those who are less fortunate than himself. He had a very big and kind heart and although in his later life he didn't live a life of luxury, his happiness came from doing what little he can for his family and friends all over the world.

We will miss you dearly papa, and we will always love you and have you in our hearts. We will pray to you and let you know of our happiness and wellbeing. We are deeply saddened that you won't get a chance to meet your third great grandchild, to witness Anita's acceptance to university, and attend my wedding.

You taught us a lot, especially how to be better people, and we will cherish and pass on your wisdom and memories for as long as we live.

Sunday's will never be the same...

***Always in our hearts.***

***By Devan Vimal***
***(Grandson)***

---

# EULOGY

Do not stand at my grave and weep
I am not there. I do not sleep.
I am a thousand winds that blow.
I am the diamond glints on snow.
I am the sunlight on ripened grain.
I am the gentle autumn rain.
When you awaken in the morning's hush
I am the swift uplifting rush
Of quiet birds in circled flight.
I am the soft stars that shine at night.
Do no stand at my grave and cry;
I am not there. I did not die.

It is a great honour to write a piece on Vimal's Appa; a man who has graced most of my adult life. When I was first introduced to Vimal's Appa, my natural instinct was to call him 'Appa'. He never forgot the occasion. None have I. In fact, many long-standing friends of Vimal have fostered Appa as our 'Appa' or our 'uncle'. That was the strength of relationship 'Appa' shared with each of us. He never ever forgot what we did for him; even if the help were small.

Most of us know Appa as someone who was set in his way. But there is a side of Appa that I marvel and respect: his sense of adventure and determination. Appa left everything familiar and dear to him in Sri Lanka and ventured overseas to a land he had no social, cultural or family ties. He was his own role model. He took the 'road less travelled' and won. It gives me great pride because each of us who remember him as 'Appa' or 'Uncle' had followed his pioneering ways; though our feats not so arduous.
Appa, I shall miss your frank and plain speaking; your sharp and focus mind. I am grateful for the time we have spent together. Thank you for walking together with me. I understand we have to part company and for your to rest a while; but soon, we will walk together again.

Om Shanti, Om Shanti, Om Shanti.

***-Pathma Lingam***

# அமரர் வேலுப்பிள்ளை அவர்களின் வாழ்க்கை நினைவுக் குறிப்புக்கள்

ஆர்ப்பரித்து நிற்கும் சமுத்திரத்தை நாற்திசைகளிலும் எல்லைகளாய்க் கொண்ட தீவாம் இலங்கை. அதன் வடபுறத்தே அமைந்திருப்பது யாழ்ப்பாண தீபகற்பம். இத்தீபகற்பத்தின் வட திசையில், இந்து சமுத்திரத்தின் கரையில் முற்காலத்தில் புகழ் பூத்த சம்புலிங்கேஸ்வரர் ஆலயத்தை தன்னகத்தே கொண்டிருந்தாலும், நெல் வயல்களாலும் எழில் கொஞ்சும் இயற்கை வனப்புகள் மிக்க சோலைகளால் சூழப்பட்டிருப்பதுமான பிரதேசம் தான் மாதகல் என்று அழைக்கப்படும் கிராமம் ஆகும். இக்கிராமத்தில் உழுதுண்டு இனிதே இல்லற வழியில் வாழ்ந்து வந்த இராமலிங்கம் மனைவி நாகமுத்து தம்பதியினரின் மகனாக 1927ம் வருடம் புரட்டாதி மாதம் ஒன்பதாம் திகதியன்று (09-10-1927) வேலுப்பிள்ளை பிறந்தார். தில்லையம்பலம், செல்லத்துரை, தங்கம்மா, வேலுப்பிள்ளை, பொன்னம்மா, நடராசா, தம்பிப்பிள்ளை என்ற வரிசையில் பிறந்திருந்த ஏனைய உடன் பிறந்தவர்களில் இவர் நான்காவதாக இருந்தார்.

மாதகல் அரசடிப்பிள்ளையார் வீற்றிருக்கும் சூழலில் இவரது பிள்ளைப்பிராய வாழ்வு அமைந்திருந்தது. அவரது ஆரம்ப கல்வி அங்கிருந்த மாதகல் விக்கினேஸ்வர் வித்தியாலயத்தில் ஆரம்பித்தது. தொடர்ந்து மாதகல் அர்ச் ஜோசப் கல்லூரியிலும், இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியிலும் கல்வி கற்றார். இவருடைய இளமைக் காலத்திலேயே தொழில் பயிற்சி தேயிலை உற்பத்தியோடு சம்பந்தப்பட்டதாக அமையலாயிற்று. ஆங்கிலேயர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட தேயிலை உற்பத்தி பெருந்தோட்டத்துறையும், அதன் உற்பத்தியான இலங்கை தேயிலையும் உலகப்புகழ் பெற்றிருந்த அந்தக் காலகட்டங்களில் இவர் இந்த துறையில் பயிற்சி பெற்று மலையகத்தில் பணிபுரிந்தார். இந்நாட்களில் இவருடைய மூத்த சகோதரரான தில்லையம்பலமும் ஆசிரியராக தலவாக்கலை (ஹற்றன் பிரதேசம்) என்னுமிடத்தில் தொழில் புரிந்து வந்தார். அவரோடு சேர்ந்து வாழ்ந்திருந்த அங்குள்ள கூம்ஸ்வூட் தோட்டம், பின்னர் இரத்தினபுரி கிரியெல்ல தோட்டம் போன்ற இடங்களில் "ரீ மேக்கர்" எனப்படும் மதிப்புக்குரிய பதவியில் பணியாற்றினார்.

1954ம் வருடம் ஆடி 21ம் நாளில் (21-07-1954) வேலுப்பிள்ளை திருமண பந்தத்தில் இணைந்தார். சின்னத்தம்பி-இராமாசி தம்பதியினரின் இளைய புதல்வியாகிய அன்னலட்சுமியை இவர் கரம் பிடித்தார். இவர்களுடைய ஒரே புதல்வனான விமலநாதன் 1956ம் ஆண்டு கார்த்திகை மாதம் 28ம் திகதியன்று பிறந்தார்.

இவரது மாமனாராகிய சின்னத்தம்பி (அன்னலட்சுமியின் தந்தையார்) "சிவலையர்" என்ற செல்லப்பெயராக அந்நாட்களில் ஊர் மக்களால் அழைக்கப்பட்டிருந்தவர் என்பதுடன் புகழ் பூத்த மாதகல் கணேச முருகமூர்த்தி ஆலய திருவிழாக்களில் பக்தர்களால் எடுக்கப்படும் ஆட்டக்காவடிகளை அழகுற அமைத்துக் கொடுப்பதில் பெயர் பெற்றிருந்தவரும் ஆவார் என்பது இங்கு நினைவு கூரத்தக்கது.

1958ம் ஆண்டு வேலுப்பிள்ளை குடும்பத்தினரின் வாழ்க்கையில் திருப்புமுனையாக அமைந்தது. ஆபிரிக்காக் கண்டத்திலுள்ள ஒரு நாடாகிய போர்த்துக்கேசிய கிழக்கு ஆபிரிக்கா (PORTUGESE, EAST AFRICA) என்னும் இடத்தில் தேயிலைத் தொழிற்சாலை நிர்வாக அதிகாரியாக ஒரு உயர் தொழில் வாய்ப்பு இவரைத் தேடி வந்தது. அது போன்ற தூர தேச ஆபிரிக்க நாடுகளுக்கு தொழில் தேடிச் செல்வதை யாரும் நினைத்திருக்காத அன்றைய காலகட்டத்தில் தற்துணிவுடன் இவர் அங்கு சென்று அப்பதவியைப் பொறுப்பேற்றார். குடும்பத்தினரை பிரிந்து முற்றிலும் அந்நியமான சூழ்நிலையில் பணியாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அன்னலட்சுமி தனது சகோதரியான பொன்னம்மா குடும்பத்தினருடன் வாழ்ந்தார். பொன்னம்மாவின் கணவரான "கந்தையா மாஸ்ரர்" எல்லோராலும் அறியப்பட்டிருந்த திரு கந்தையா JP அவர்கள் யாழ். கூட்டுறவு சபையின் தலைவராகவும், இலங்கை தேசிய கூட்டுறவுச் சபைின் உப தலைவராகவும், யாழ் கூட்டுறவு மொத்த விற்பனைப் பிரிவின் (CWE) நிர்வாக இயக்குனராகவும். பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சமாசத்தின் தலைவராகவும் பல பதவிகளை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1969ம் ஆண்டில் வேலுப்பிள்ளையின் மனைவியும் இந்நாட்டிற்கு சென்று ஒன்றாக வாழ்ந்தார். அங்கு தொழில் புரிந்த மாதகலை சேர்ந்த சீமான்பிள்ளை குடும்பத்தினரும், வேறு சில இலங்கையர்களின் குடும்பங்களும் இவர்களுக்கு நண்பர்களாக அமைந்தனர். 1975 ஆண்டளவில் அன்னலட்சுமி ஊர் திரும்பினார். விமலநாதன் இந்தியாவிலும், பின்னர் இங்கிலாந்திலும் கல்வி கற்கும் பொருட்டு சென்றார். வேலுப்பிள்ளை மேலும் சில காலம் அங்கு பணிபுரிந்து வந்தார். அக்கால கட்டங்களில் அந்த நாட்டின் பெயர் மொஸாம்பிக (MOZAMBIQUE) என்று பெயர் மாற்றம் பெற்றிருந்தது.

இவர் பணியாற்றிய ஆரம்ப காலங்களில் இலங்கையிலிருந்து புறப்பட்டால் அந்த நாட்டிற்கு நைரோபி வழியாக போய்ச் சேர்வதற்கு (கப்பல், விமான மார்க்கங்கள்) ஒன்றரை மாத காலம் எடுக்கும் என்று சொல்வர். இடையிடையே ஆறு மாத விடுமுறையில் வந்து உள்ளூர் உறவினருடன் தங்கிச் செல்வார்.

1983ம் ஆண்டில் தமது பணியிலிருந்து ஓய்வு பெற்று நாடு திரும்பினார். ஊரில் தமது மகனுக்கு பிடித்த சூழலில், காஞ்சிவான் வயிரவகோயிலுக்கு அண்மையாக அமைந்த தமது அழகிய இல்லத்தில் மகிழ்வோடு சீவித்து வந்தார்.

ஏறத்தாள ஐந்து வருடங்கள் இவ்வாறு வாழ்ந்து வந்த கால கட்டங்களில் நாட்டில் ஏற்பட்ட அமைதியற்ற போர் சூழல் படிப்படியாக உக்கிரமடைந்து இவர்களுடைய வாழ்விலும் நாட்டை விட்டு போக வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது. 1988 மீண்டும் அந்நிய தேசத்தில், இங்கிலாந்தில் சீவிக்கத் தொடங்கினர். ஏற்கெனவே மகன் விமலநாதனின் குடும்பங்களும் அங்கேயே இருந்ததால் ஒரு விதத்தில் இது நன்மையாக அமைந்தது எனலாம்.

இவரது வாழ்க்கைத் துணைவியார் 2010ம் ஆண்டு ஆவணி மாதம் 6ம் திகதியன்று (06-08-2010) இவ்வுலக வாழ்வை நீத்து இவரைப் பிரிந்து சென்றார். இருந்தபோதும் அன்பு மகன், மருமகள், பாசமிகு பேரப்பிள்ளைகள் ஆகியோரின் ஆரதவும் அரவணைப்பும் அங்கிருந்த உறவினர்களின் பாசமும் அவருக்கு ஆறுதலாக அமைந்தன.

என்றோ ஒரு நாள் எவரது வாழ்வும் இறுதியை எய்தியே தீரவேண்டும் என்பது இயற்கையின் நியதி, இவ்விதத்தில் வேலுப்பிள்ளை அவர்களின் ஆன்மா இவ்வுலக வாழ்வும் இவ்வருடமாகிய 2015ம் ஆண்டு சித்திரை மாதம் 21ம் திகதியன்று இறுதியை அடைந்தது.

வேலுப்பிள்ளை அவர்கள் தன்னளவில் ஒரு பூரணமான திருப்தியான வாழ்வை வாழ்ந்தார். ஒரு நல்ல கணவராக, நல்ல தந்தையாக, உறவினராக வகித்தவராக, ஒரு நல்ல மனிதரென பெயர் எடுத்தவராக அவர்

வாழ்ந்திருந்தார். தன் உறவினர்கள் பலரையும் பல்வேறு வகை உதவிகளாலும் வாழ வைத்திருந்தார். இவருடைய வாழ்விலும் இவரால் ஒரு இடைஞ்சல் ஏற்பட்டதாக சொல்ல இடம் ஏற்படாத முறையில் வாழ்ந்தார். தூர தேசங்களில் இருந்த காலங்களிலும் உற்றார் உறவினர்களின் சேதிகளை அக்கறையோடு விசாரித்து அறிந்து கொண்டே இருப்பார். உரிய தேவைகளுக்கு உதவுவதிலும் பின் நிற்க மாட்டார். எந்தக் காரியத்தையும் ஒரு நேரந்தவறாத முறையில் செய்வதில் கண்டிப்பாக இருந்து வந்தமை அவரது சிறப்பியல்பு எனலாம். அத்துடன் எமது உறவினர் தொடர்பான கடந்த கால பழைய சம்பவங்களை நாள், மாதம், ஆண்டு என்ற வகையில் அப்படியே சொல்லக்கூடிய அவரது ஞாபகசக்தி எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தும்.

மாதகல் காஞ்சியான் வயிரவர் பற்றிய தீர்ப்பு கோவில் அவரது உயிரிலும் எண்ணங்களிலும் எப்போதும் கலந்திருந்தது. இங்கிருந்த காலத்தில் காஞ்சியானைத் தரிசிப்பதில் மனநிறைவு கண்டிருந்தார். அவரது ஆன்மா நற்கிரிகையடைய அந்த காஞ்சிவான் வைரவப்பெருமானின் நற்கருணை துணை பரிய வேண்டுவோமாக!

அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுவோமாக.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி

# பாசத்துடன் இருந்தோம்

பாசத்துடன் இருந்தோம் இன்று உங்களைப் பறி கொடுத்துவிட்டு இங்கு பரிதவித்து நிற்கின்றேன் அண்ணா!

தினமும் உங்கள் நினைவால் மனம் வருந்தி நிற்கின்றேன் அண்ணா!

உங்களை எப்போது நேரில் காண்பேன் கதைப்பேன் என்று கனவு கொண்டிருந்தேன். எல்லாம் கனவாகிப் போய் விட்டது. நீங்கள் என் மேல் வைத்திருந்த பாசத்தையும், அன்பையும் விபரிக்கத் தொடங்கினால் பக்கம் பக்கமாக எழுதினாலும் முடிவடையாது. ஆகவே கண்ணீர் சொரிவதுடன் சோகமும் வருவதால் உங்கள் ஆத்மா சாந்தி பெற உளமார இறையருளை இறைஞ்சுகிறேன்.

என்றும் உங்கள் ரூபத்தை கற்பனை செய்து
கண்ணீர் விடும் பாசம் உள்ளதாய்

*-தம்பிப்பிள்ளை*

## எமது ஞாபகங்களிலிருந்து.......

வேலுப்பிள்ளை மாமா இன்று அமரராகி விட்டார். அவரும், அன்னமாமியும் எமது சிறுபராயத்து ஞாபகங்களிலிருந்து பிரிக்க முடியாதவர்கள். அவர்கள் இருவருமே எம்மீது காண்பித்த அக்கறை, பாசம் காரணமாக எமது நினைவுகளில் அவர்களது முகங்கள் நிரந்தரமாகவே பதிந்து விட்டன. தூர தேசத்தில் வாழ்ந்த நிலையில் பிரிந்து சென்று விட்டனர்.

எமது சிறு பராயத்தில் ஆபிரிக்காவில் வேலை செய்கின்ற வேலுப்பிள்ளை மாமா விடுமுறையில் வருகிறார் என்ற செய்தி எமக்கு புதுமை நிறைந்ததாயிருக்கும். அவருடைய குடும்பத்தினர் போலவே நாமும் குதூகலமடைவோம்.

பின்னர் ஓய்வு பெற்று வந்து எம்முடன் பழகி இங்கு வாழ்ந்த நாட்களும் இனிமையானவை. அவருடைய கனிவான பேச்சு இன்று நேற்று கேட்டது போல காதில் ஒலிக்கிறது.

வேலுப்பிள்ளை மாமா எங்களது கல்வி முன்னேற்றத்திற்கு செய்த உதவியை இன்றும் நன்றியுடன் நினைவு கூர முடிகிறது. எமது இன்றைய வாழ்விற்கான ஆதார உதவியை உரிய சந்தர்ப்பத்தில் வழங்கிய பெரிய மனது படைத்தவராக அவர் விளங்கினார்.
எவருக்கும் தீங்கு நினைக்காமல் வாழ்ந்தமை அவரில் நாம் கண்ட பெருந்தன்மைகளில் ஒன்று.

ஒரு நல்ல மனிதராக வாழ்ந்தார். சொல்வதற்கு முற்றிலும் தகுதியுடையவராக வாழ்ந்தார் என்ற ஒன்றே அவரை பெருமையுடன் நினைவில் வைத்திருப்பதற்கு போதுமானதாகும்.

அவருடைய ஆன்ம நற்கிரிகையடையும் என்பதில் எமக்கு எந்த ஐயமும் இல்லை

*-Dr. செ.சண்முகதாஸ்*
*மருமகன் -மாதகல்*







# நன்றி நவில்கின்றோம்

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்த எமது அன்புத் தந்தை **அமரர் திரு இராமலிங்கம் வேலுப்பிள்ளை** அவர்களின் அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஓடி வந்து உதவி செய்த அன்பு நெஞ்சங்களுக்கும். இறுதிக் கிரியைகளின்போது எமக்கு தோள் கொடுத்து ஆறுதல் கூறியவர்களிற்கும் உள் நாட்டிலும் வெளிநாட்டிலிருந்தும் அனுதாபச் செய்திகள் மலர் வளையங்கள் அனுப்பியவர்களிற்கும் எமது தேவைகள் அறிந்து தாமாக வந்து உதவி புரிந்தவர்களிற்கும். குறிப்பாக உணவளித்தோர்களிற்கும். அந்தியேட்டிக் கிரியையின் நிமித்தம் எங்களுடன் கூட இருந்த உதவிக்கொண்டிருக்கும் எமது அன்புச் சொந்தங்கள். நண்பர்கள் அனைவரிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

குடும்பத்தினர்கள்.



# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா**



Designed & Printed @ JR Print-London, www.jrdigitals.com T : 0208 503 6643